**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 183/2022**

**Prosecution witness : அ.சா.8** **Date : 22.05.2024**

| | |
|---|---|
| **Name : சுக்ரிதா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. ) (Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈஎஸ் ஐ மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022ம் வருடம் பணி மருத்துவராக பணியிலிருந்தபோது கடநத் 14.02..2022 இரவு 07.30 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.கோவிந்தராஜ் வயது 36, த/பெ கோபால் என்பவரை அவருடைய மேற்பார்வையாளர் நேதாஜி என்பவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 14.02.2022 –ம் தேதி மாலை 05.00 மணிளவில் 10 நபர்கள் அதில் 5 பெண்கள் 5 ஆண்கள் மமுட்டி கட்டை மற்றும் அவருடைய கைகலால் மல்லிக்குந்தம் PWD வாய்க்கால் அருகில் தன்னை அடித்ததாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) இடது முன்னங்கையில் பரவரலான வீக்கம் இடது கையில் 2x2 cm சிராய்ப்பு காயம் 0.5x0.5 இடது மார்பின் கீழ் புறத்தில் இருந்தது. மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. எலும்பு முறிவு சிகிச்சை நிபுனர் முன்னங்கையில் ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினார். காது மூக்கு தொண்டை சிறப்பு மருத்துவர் அரசு தலைமை மருத்துவமனை மேட்டூர் இடது காதில் காது

சவ்வு Drauma வினால் அவருடைய காது சவ்வில் துளை ஏற்பட்டு கடுமையாக செவி திறன் பாதிக்கப்ட்டுள்ளதால் அவருடைய காயம் கொடுங்காயம் என்று சான்றழிக்கப்பட்டார். அவருக்கு அறுவை சிகிச்சை அளிக்க அறிவுறித்தினார் ஆனால் அந்த நோயாளிக்கு விருப்பம் இல்லை என்று தெரிவித்தால் சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார். இந்த வழக்கில் காவல் துறைக்கு கடந்த 14.02.2022 ம் தேதி மாலை 07.00 மணிக்கு சம்பவம் குறித்து போலிஸ் Intimation அளிக்கப்பட்டது. Police Intimation **அ.சா.ஆ.3** ஆகும்.

3) அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. **மேற்படி விபத்து பதிவேடு அ.சா.ஆ.4.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**